# மறைமலைநகர் நகராட்சி

## குடிநீர் விநியோகம் விவரம்

- மறைமலைநகர் நகராட்சி சென்னைக்கு அருகாமையில் உள்ள நகராட்சியாகும். இந்நகராட்சி 58.08 சதுர கிலோ மீட்டரில் 21 வார்டுகள் உள்ளது. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 81361 ஆகும். தற்போதைய மக்கள் தொகை 97538 ஆகும். இதில் 22898 குடியிருப்புகள் மற்றும் 273 தொழிற்சாலைகள் மற்றும் 432 வணிகம் அமைந்துள்ளது. மறைமலைநகர் நகராட்சியில் உள்ள 2142 தெருக்கள் உள்ளன. சாலையின் மொத்த நீளம் 325.708 கி.மீ ஆகும்.

- நகராட்சியில் மொத்தமுள்ள 21 வார்டுகளில் 6 வார்டு பகுதிகளுக்கு கூடுவாஞ்சேரி பாலாறு கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் 6.24 இலட்சம் லிட்டர்கள் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தினசரி 24.85 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. ஏனைய 15 வார்டு பகுதிகளுக்கு உள்ளூர் நீராதாரங்கள் மூலம் 195 பவர் பம்புகள், 572 கைப்பம்புகள், 88 பொது கிணறுகள் மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 68.20 இலட்சம் லிட்டர் குடிநீர் எடுக்கப்பட்டு பொது குழாய்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 151 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (RO Plant) 21 வார்டுகளில் தினந்தோறும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. 3 எண்ணிக்கை குடிநீர் லாரிகள் மூலம் குடிநீர் குழாய் இல்லாத பகுதிகளுக்கு தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வரப்படுகிறது.

- பாதுகாக்கப்பட்ட குடிநீர் தற்போது நாள் ஒன்றுக்கு 24.85 இலட்சம் லிட்டர் மற்றும் நந்திவரம் கூடுவாஞ்சேரி கூட்டு குடிநீர் திட்டம் மூலம் 6.24 இலட்சம் லிட்டர் பெறப்பட்டு உள்ளூர் நீராதாரங்கள் மூலம் திறந்தவெளி பொது கிணறு மற்றும் ஆழ்துளை கிணறுகள் மூலம் குடிநீர் உறிஞ்சப்பட்டு மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள் மூலம் குளோரினேஷன் செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் தற்போதைய மக்கள் தொகையின் படி தினசரி 102 LPCD என்ற அளவில் தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்<br>ஆ) கூடுவாஞ்சேரி கூட்டு குடிநீர் திட்டம் | – | 2.485<br>0.624 |
| 2. உள்ளூர் நீர் ஆதாரம் (கிணறு) (88) | – | 3.830 |
| 3. மினி பவர் பம்ப் (195) | – | 2.440 |
| 4. கை பம்ப் (572) | – | 0.550 |
| தற்பொழுது பெறப்படும் குடிநீர் அளவு | | **9.929 MLD** |

- மறைமலைநகர் நகராட்சியிலிருந்து சுமார் 12 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள செட்டிப்புண்ணியம் ஊராட்சியிலுள்ள கைவிடப்பட்ட நிலையில் உள்ள குவாரியினை மாவட்ட ஆட்சித் தலைவர், நகரமன்ற தலைவர், நகராட்சி ஆணையர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் மற்றும் கனிமவளத் துறை அலுவலர்கள் ஆகியோருடன் நேராய்வு செய்யப்பட்டது. மாவட்ட ஆட்சியர் அறிவுரையின்படி பயன்பாடற்ற குவாரியில் உள்ள நீரானது குடிநீர் பயன்பாட்டிற்கு உகந்ததா என தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக BOD மற்றும் COD குறித்து பகுப்பாய்வு செய்யப்பட்டதில் குடிநீருக்கு உகந்தது என அறிக்கை பெறப்பட்டுள்ளது. மேலும் மேற்காணும் குவாரி நீரினை சுத்திகரிப்பு செய்து இந்நகராட்சி குடிநீர் ஆதாரத்திற்கு பயன்படும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கை ரூ.40.80 கோடி மதிப்பீட்டில் உரிய நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு கோரி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**ஆணையாளர்**
**மறைமலைநகர் நகராட்சி**